பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

14 09 2024 **SATURDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி ஆறு வந்தே பாரத் ரயில் சேவைகளை இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.
- அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தலைநகர் போர்ட் ப்ளேயர் பெயர் மாற்றத்திற்கு பிஜேபி வரவேற்பு தெரிவித்துள்ளது.
- **Ford** கார் நிறுவனம் தமிழ்நாட்டில் மீண்டும் தனது உற்பத்தியை தொடங்க முன்வந்துள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
- மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு துறைமுகங்கள் வளர்ச்சி பெற மத்திய அரசு உதவ வேண்டும் என்று தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது.
- ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப்போட்டியில் நடப்பு சாம்பியன் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

*- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி ஆறு வந்தே பாரத் ரயில் சேவைகளை இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

ஜார்கண்ட் மாநிலம் ஜாம்ஷெட்பூரில் உள்ள டாடா நகர் ரயில் நிலையத்தில் இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் அவர் கலந்துகொண்டு புதிய எக்ஸ்பிரஸ் ரயில் சேவைகளையும் தொடங்கிவைக்கிறார்.

மத்திய அரசு ரயில்வேத்துறையை நவீனமயமாக்கி வருவதோடு, பொதுமக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு விரைவாகவும், வசதியாகவும் சென்றுவர புதிய ரயில் சேவைகளை அறிமுகப்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, ஜார்கண்ட் மாநிலம் வழியாக செல்லும் ஆறு வந்தேபாரத் ரயில் சேவைகளை பிரதமர் இன்று தொடங்கிவைக்கிறார்.

ஜார்கண்ட் மாநிலத்திற்கான பல்வேறு ரயில்வே வளர்ச்சித் திட்டங்களையும் பிரதமர் இன்று தொடங்கிவைக்கிறார்.

<<<<<>>>>

அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தலைநகர் போர்ட் ப்ளேயரின் பெயர் ஸ்ரீ விஜயபுரம் என்று மாற்றப்பட்டுள்ளதற்கு பிஜேபி வரவேற்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் தலைவர் திரு ஜெ பி நட்டா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், காலனி ஆதிக்க முத்திரை இல்லாத எதிர்காலத்தை தழுவுவதற்கான நடவடிக்கை இது என்று குறிப்பிட்டுள்ளார்.

காலனி ஆதிக்க அடையாளங்களை மாற்றி, நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க அடையாளத்தை மீண்டும் ஏற்படுத்த வேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு சிந்தனையை நிறைவேற்றும் வகையில் மத்திய அரசு இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

போர்ட் ப்ளேயர் பெயர் மாற்றத்திற்கு மத்திய அமைச்சர்கள் பலரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>

புதுதில்லியில் நேற்று முன்தினம் காலமான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீத்தாராம் யெச்சூரியின் உடல் இன்று பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்படுகிறது.

காலை 11 மணிமுதல், மாலை 3 மணிவரை அரசியல் கட்சித்தலைவர்கள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்த உடல் வைக்கப்பட்டிருக்கும் என்றும், பின்னர் அவரது விருப்பப்படி எய்ம்ஸ் மருத்துவமனையின் மருத்துவ ஆராய்ச்சிக்காக உடல் தானம் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் நேற்று சீத்தாராம் யெச்சூரியின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு கேரள மாநில ஆளுநர் திரு ஆரிஃப் முகமது கான், முதலமைச்சர் திரு பினராயி விஜயன், ஆந்திர மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு, பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

<<<<<>>>>

**Ford** கார் நிறுவனம் தமிழ்நாட்டில் மீண்டும் தனது உற்பத்தியை தொடங்க முன்வந்துள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் தாம் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது சிகாகோவில் **Ford** நிறுவனத்தின் உயரதிகாரிகளை சந்தித்து தமிழகத்தில் மீண்டும் உற்பத்தியை தொடங்க வேண்டும் என்றும், உலகளாவிய திறன் மையத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று தாம் வலியுறுத்தியதாகவும் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இதன் தொடர்ச்சியாக, **Ford** நிறுவனம் தமிழகத்தில் மீண்டும் உற்பத்தியை தொடங்க முன்வந்துள்ளது என்றும், இதன்மூலம் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அமெரிக்காவில் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு இன்று சென்னை திரும்புகிறார்.

<<<<<>>>>

மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு துறைமுகங்கள் வளர்ச்சி பெற மத்திய அரசு உதவ வேண்டும் என்று தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

கோவாவில் நேற்று நடைபெற்ற கடலோர மாநிலங்கள் மேம்பாட்டுக்குழுவின் கூட்டத்தில் பேசிய தமிழக பொதுப்பணி மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு எ வ வேலு, நாகப்பட்டினம் துறைமுக வளர்ச்சிப்பணிகளுக்காக மத்திய அரசு பத்து கோடியே 47 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இந்த நிதியுதவியானது நாகப்பட்டினம் மற்றும் இலங்கையின் காங்கேசன் துறை இடையே பாதுகாப்பான மற்றும் வசதியான கப்பல் சேவையை உறுதி செய்ய உதவும் என்று அவர் கூறினார்.

நாகப்பட்டினம் துறைமுகத்தின் விரிவாக்கத்திற்காக சாகர் மாலா திட்டத்தின்கீழ், 300 கோடி ரூபாய் நிதியுதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், இதன்மூலம், நடுத்தர அளவிலான சரக்கு மற்றும் பயணிகள் கப்பல்களை கையாள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

தூத்துக்குடியில் உள்ள தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனத்தின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக சாகர் மாலா திட்டத்தின்கீழ், 11 கோடியே 47 லட்சம் ரூபாய் வழங்குமாறும் மத்திய அரசை அவர் கேட்டுக்கொண்டார்.

வரலாற்று சிறப்புமிக்க ராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையே கப்பல் போக்குவரத்தை மீண்டும் தொடங்க தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு 100 சதவீத நிதியுதவி வழங்க வேண்டும் என்றும் திரு எ வ வேலு வலியுறுத்தினார்.

<<<<<>>>>

அத்திக்கடவு - அவினாசி திட்டத்தின்கீழ், அனைத்து ஏரிகளுக்கும் தண்ணீர் செல்வதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

சேலத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பல ஏரிகளுக்கு தண்ணீர் செல்லவில்லை என்று விவசாயிகள் கூறியதாக தெரிவித்தார்.

அனைத்து ஏரிகளுக்கும் தண்ணீர் செல்ல தேவையான நிதியை ஒதுக்கி, பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், அஇஅதிமுக ஆட்சியில் கொண்டுவந்த திட்டம் என்று கருதாமல், மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

அத்திக்கடவு - அவினாசி திட்தட்தில் சில இடங்களில் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளதாகவும், அவற்றை மாநில அரசு சரி செய்ய வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>

ஆவணி மாத கடைசி சுபமுகூர்த்த தினமான நாளை மறுநாள் பத்திரப்பதிவுக்கு கூடுதல் முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக பதிவுத்துறை தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தெரிவித்துள்ளார்.

சுபமுகூர்த்த தினங்களில் அதிக அளவில் பத்திரப்பதிவுகள் நடைபெறுவதை முன்னிட்டு, பொதுமக்களிடமிருந்து வந்த கோரிக்கையை ஏற்று இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

வரும் திங்கட்கிழமை ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களில் 100 டோக்கன்களுக்கு பதிலாக, 150 டோக்கன்களும், இரண்டு சார் பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களில் 200 டோக்கன்களுக்கு பதிலாக, 300 டோக்கன்களும் வழங்கப்படும் என்று அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>

தேசிய ஊட்டச்சத்து வார விழாவின் ஒருபகுதியாக சென்னை அகில இந்திய வானொலியின் செய்திப்பிரிவு சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

"உணவும் - இதய நலமும்" என்ற தலைப்பிலான இந்த நிகழ்ச்சியில், பிரபல இதய மருத்துவர் வி சொக்கலிங்கம் மற்றும் எமது செய்தி ஆசிரியர் எஸ் ஜாய் பங்கேற்கின்றனர்.

இந்த நிகழ்ச்சி இன்று காலை மணி 10.02 முதல், ஒருங்கிணைந்த அலைவரிசையில் ஒலிபரப்பாகிறது.

<<<<<>>>>

தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல், மிதமானது வரையிலான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் ஒரு சில இடங்களில், அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக இருக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>

*இருவரிச்செய்திகள்*

சர்வதேச அளவில் ரஷ்யாவின் உளவு நடவடிக்கைக்கு அந்நாட்டின் **RT** என்ற ஊடக நிறுவனம் உதவி செய்வதாக கூறி, அதன்மீது அமெரிக்கா தடை விதித்துள்ளதாக அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஆன்டனி பிளிங்கன் அறிவித்துள்ளார்.

<<<<<>>>>

மியான்மரில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 33 பேர் உயிரிழந்தனர். 2 லட்சத்து 30 ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

<<<<<>>>>

கனடாவில் இந்திய தூதரக அலுவலகத்தின் மீது காலிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் தொடர்பாக பஞ்சாபில் பல்வேறு இடங்களில் நேற்று தேசிய புலனாய்வு முகமை திடீர் சோதனை நடத்தியது.

<<<<<>>>>

மிலாது நபி தினத்தை முன்னிட்டு, வரும் 17-ஆம் தேதி நாமக்கல் மாவட்டத்தில் மதுபானக் கடைகள் மூடப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் திருமதி உமா அறிவித்துள்ளார்.

<<<<<>>>>

திருப்பூரில் சாலை விபத்துகளை குறைக்கும் வகையில், மாநகர காவல்துறை சார்பில், தாராபுரம் சாலையில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் பல்லடம் சாலை கணபதி பாளையம் பிரிவில் தானியங்கி சிக்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

<<<<<>>>>

தேனி மாவட்டத்தில் பணத்திற்காக ஆண் குழந்தையை விற்க முயன்ற தந்தை உட்பட மூன்று பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் நடைபெற உள்ள தசரா திருவிழாவுக்கு வேடமணிந்து வரக்கூடிய பக்தர்கள் சாதி ரீதியிலான கொடிகள், டி-சர்ட் அணிந்து வர தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் இன்று விநாயகர் சிலை ஊர்வலம் நடைபெறவுள்ளதால், விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டத்தில் நேற்று இந்திய தர நிர்ணய அலுவலகத்தின் அதிகாரிகள் நடத்திய திடீர் சோதனையில் ஐ எஸ் ஐ குறியீடு இல்லாத தண்ணீர் பாட்டீல்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

<<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப்போட்டியில் நடப்பு சாம்பியனான இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

சீனாவின் **Hulunbuir** –ல் நடைபெறவுள்ள இப்போட்டி இந்திய நேரப்படி இன்று பிற்பகல் மணி 1.15-க்கு தொடங்க உள்ளது.

நான்கு முறை சாம்பியனான இந்தியா ஏற்கனவே அரையிறுதிக்கு முன்னேறி உள்ள நிலையில், ஐந்தாவது மற்றும் கடைசி போட்டியான இப்போட்டியிலும் வெற்றிபெறும் முனைப்பில் உள்ளது.

கேப்டன் ஹர்மன் பிரீத் சிங் தலைமையிலான இந்திய அணி இம்முறை இதுவரை நடைபெற்ற அனைத்து போட்டிகளிலும் வெற்றிபெற்று முன்னிலையில் உள்ளது.

**<<<<<>>>>**

வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Dhruv Kapila – Tanisha Crasto** இணை, இன்று கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தோனேஷியாவின் **Maulana – ICS Jamil** இணையை எதிர்கொள்கிறது.

**<<<<<>>>>**